OS.No. 54/2015

Dated : 03.04.2024

Time: 12.30 p.m to 12.45 p.m

D.W- 2 சாட்சி துரைசாமி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் சார்பாக முதன்மை விசாரணை

முதல் விசாரணை

1) நான் லத்துவாடியில் வசித்து வருகிறேன். துரைசாமி என்பவர் அவருடைய கொழுந்தியா புஷ்பம் என்பவர் பெயரில் சொத்து எழுதி வைப்பதற்காக என்னை பலமுறை அழைத்தார். அதனால் நான் வந்தேன். பிறகு என்னை கையொப்பம் செய்ய சொன்னார்கள். நான் கையொப்பம் செய்தேன். உயில் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க தான் எனக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. அந்த உயிலை துரைசாமி புஷ்பம் பெயரில் எழுதி வைத்தார். அதன் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 13 வருடத்திற்கு முன்பு இருக்கும்.

2) மேற்படி உயிலை மருதசாமி எழுதினார். பத்திர பதிவாளர் அலுவலகம் கெங்கவல்லியில் வைத்து எழுதப்பட்டது. அந்த உயிலுக்கான வாசகங்களை துரைசாமி தான் சொன்னார். ஆவணங்களை அவர் கொடுத்துதான் உயில் எழுதப்பட்டது. அதில் 3 வகையான சொத்துகள் அதாவது அவர் பெயரில் உள்ள சொத்து, அவர் தகப்பனார் பெயரில் மற்றும் மனைவி பெயரில் இருந்த சொத்துக்களை சொல்லி உயில் எழுதினார். அதன் பிறகு அதை என்னிடம் படித்து காண்பித்தார் நான் கையொப்பம் செய்தேன். பிறகு சார்பதிவாளர் அலுவலகம் சென்று ஒரு கையொப்பம் செய்தேன்.

3) சாட்சி உயிலை காண்பித்து முதல் சாட்சியாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என சொல்கிறார். மேலும் அதில், வீரகனூரைச் சேர்ந்த ஒருவரும் கையொப்பம் செய்துள்ளார். அதில் துரைசாமியும் கையொப்பம் செய்தார். மேற்படி

நாங்கள் அனைவரும் அந்த சமயத்தில் ஒரே இடத்தில் தான் இருந்தோம். அனைவரும் அருகருகே அமர்ந்து தான் கையொப்பம் செய்தோம்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

Sd/- K.Ananthan
**Subordinate Judge,**
**Attur.**